ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1718/15 - 2011 අගෝස්තු 10 වැනි බදාදා - 2011.08.10

*1718/15 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள்

**1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க காணிச்சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், 1986 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணிச்சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணிச்சீர்திருத்த சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு இதன் கீழான அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கமத்தொழில் காணியில் அல்லது காணிகளில் அத்தகைய காணி அல்லது காணிகள் காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட திகதிக்கு நேரடுத்து முன்னரான திகதியில் அக்கறை கொண்டிருந்த ஒவ்வோர் ஆளும் 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள்ளாக அத்தகைய காணி அல்லது காணிகள் தொடர்பில் சட்டத்தின் பிரகாரம் கொடுக்கப்பட வேண்டிய நஷ்டஈட்டுக் கோரிக்கையில் முப்பிரதிகளில் சமர்ப்பிப்பதுடன் அந்தக் கோரிக்கையில் பின்வருவனவற்றையும் குறித்துக் காட்டல் வேண்டுமென இத்தால் பணிக்கின்றேன்:-

(அ) நட்டஈடு கோருபவரின் பெயரும் முகவரியும்,

(ஆ) அத்தகைய காணியில் அல்லது காணிகளில் அவருக்குள்ள அக்கறையின் தன்மை,

(இ) அவருடைய கோரிக்கையின் விபரம்,

(ஈ) அத்தகைய நட்டஈட்டிலிருந்து எவ்வளவு அவரால் கோரப்படுகின்றது என்பது.

சகல நட்டஈட்டுக் கோரிக்கைகளும் காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் தவிசாளருக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

வழக்குரைஞர் நிமல் ஜீ. புஞ்சிஹேவா,
தவிசாளர்,
காணிச்சீர்திருத்த ஆணைக்குழு.

காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் அலுவலகம்,
சீ. 82, கிறக்கறீஸ் அவெனியூ,
கொழும்பு 07,
2011, ஓகத்து 8.

## அட்டவணை

| தொடர் இல. | விசேட இல. | வெளிப்படுத்துநரின் பெயர் | காணியின் பெயர் | மாவட்டம் | கிராமம் | அளிக்கப்படும் அளவு ஏ. | றூட். | பேச். |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | மஹ/318 | திரு. எதுருதென்னே கெதர ஹபீப் மொகமட் சஹப்தீன் | அலுத்த எஸ்டேட் | கண்டி | அலோட்டுவ | 22 | 1 | 06 |
| 02 | மே/8 | திரு. மாயண்டி காயம்போ மாயண்டி | பிறே எஸ்டேட் | பதுளை | கலுபஹன மறுபெயர் கிரிமெட்டியகம | 16 | 0 | 00 |
| 03 | மொ/12 | திருமதி லிலியன் விஜேசிரிவர்த்தன வீரகோன் மாபரண | கொட்டிக்கம் பொக்க | மொனராகல | கொட்கம் பொக்க | 34 | 3 | 39 |
| 04 | கோ/3083 | ம/ப ஆதம்ஜி லுக்மன்ஜி தோட்டக் கம்பனி | இரனவில வத்த | புத்தளம் | இரனவில | 884 | 0 | 00 |
| | | | சென்ட் ஜோன்ஸ் வத்த | -அதே- | மங்கலஎலிய | 170 | 1 | 30 |
| | | | பொத்தோடை வத்த, | கொழும்பு | கந்தவல | 169 | 3 | 11 |
| | | | நன் பேரியல் குரூப், | இரத்தினபுரி | யக்தெஹிவல | 1376 | 1 | 33 |
| | | | அரபொலகந்த வத்த, | களுத்துறை | தெபுவன | 773 | 0 | 31 |
| | | | மேரிமவுன்ட் வத்த | குருநாகல் | லிஹினியாவத்த | 278 | 1 | 24 |

8-627